**Crl.M.P No.1238/2024 in MC No.** 08/2009 PW-1 21.11.2025

திருமதி. அமுதா, க/பெ. ராஜு, த/பெ. கோவிந்தராஜ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :

மாத ஜீவனாம்ச தொகையை உயர்த்தி கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேன், எதன் அடிப்படையில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் பெற்றுக்கொண்டிருக்கும் தொகை எனக்கு போதுமானதாக இல்லை என்பதினால் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளேன். ஏற்கனவே HMOP No. 151/2012 என்ற வழக்கை எதிர்மனுதாரர் நான் கொடுமைப்படுத்துவதாகவும், எவ்வித காரணமும் இன்றி பிரிந்து வாழ்வதாகவும் சொல்லி விவாகரத்து கோரி தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். 31.10.2018 அன்று இந்த வழக்கு கும்பகோணம் சார்பு நீதிமன்றத்தில் எதிர்மனுதாரருக்கு ஆதரவாக விவாகரத்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். நான் CMA No.04/2019 என்ற மனுவினை தாக்கல் செய்து அந்த மனு 16.07.2025 அன்று தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். இந்த நிரூபண வாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டிருக்கும் தேதி 22.07.2025 என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் ஏற்கனவே விவாகரத்து கோரி போட்ட மனுவின் பேரில் மேல்முறையீடு தாக்கல் செய்தோம் என்ற விவரத்தை குறிப்பிடாததற்கு காரணம் என்ன என்றால் வழக்கறிஞரை தான் கேட்கவேண்டும். இந்த மனுவில் கணவர் பெயர் குறிப்பிட்டு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் , விவாகரத்து ஆகிவிட்டதால் அவ்வாறு குறிப்பிடுவதற்கு உரிமை இல்லை

என்றாலும் சரியல்ல, விவாகரத்து ஆனாலும் அவர் என் கணவர் தான். எதிர்மனுதாரருக்கு விவாகரத்திற்கு பிறகு வேறு திருமணம் ஆகி வாழ்ந்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. அந்த திருமணத்தின் பதிவு சான்றிதழையும் நான் தாக்கல் செய்துள்ள மேல்முறையீட்டு மனுவில் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. எதிர்மனுதாரர் வேறு திருமணம் செய்து கொண்ட விவரம் எனக்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக எனக்கு தெரியாது என்று கட்சி செய்கிறேன் என்றாலும் சரியல்ல.

2) நான் இந்த வழக்கில் எனது சொத்து மற்றும் கடன் சம்மந்தப்பட்ட பிரமாண பத்திரம் தாக்கல் செய்யாததற்கு குறிப்பிட்ட காரணம் எதுவும் உள்ளதா என்றால் சொத்துக்கள் எதுவும் இல்லை. கடன் உள்ளது. கடன்கள் குறித்து பிரமாண பத்திரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை, அவ்வாறு தாக்கல் செய்யாததற்கு காரணம் எதுவும் இல்லை. என் மகன்கள் இருவரும் உரிய வயதை அடைந்து விட்டனர் என்றால் சரிதான். இரு மகன்களும் கல்லூரி படிப்பை முடித்து விட்டு வேலைக்கு போகாமல் உள்ளார்கள். வேலைக்கு போகிறார்கள் என்றும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் ஆசிரியராக இருந்து பணி ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். தற்போது என் தகப்பானர் உயிருடன் இல்லை. நான் குடியிருக்கும் வீடு எனது சொந்த வீடு என்றால் என் தகப்பனாரின் வீடு. என் தகப்பனாரின் சொத்து விவரங்கள் என் அண்ணனுக்கு தான் தெரியும். என் தகப்பானருக்கு ஆண்டாங்கோயிலில் சொத்து உள்ளதா அல்லது வெளியூரிலும் நிலங்கள் உள்ளதா

என்றால் ஆண்டாங்கோயிலில் மட்டும் சொந்த நிலங்கள் உள்ளது, வெளியூர்களில் கிடையாது. என் அண்ணன் அதிலிருந்து வரும் வருமானத்தை எனக்கு தருகிறார் என்றால் இல்லை. என் தகப்பானரின் நிலத்திலிருந்து வருமானம் எதுவும் என் அண்ணன் கொடுக்கவில்லை என்று ஏதாவது அறிவிப்பு அனுப்பியிருக்கிறேனா என்றால் இல்லை, என் அண்ணன் அவர் குடும்பத்தை பார்த்துக் கொள்கிறார், எனக்கு என் தகப்பனாரின் பென்சன் பணம் வருகிறது. பென்சன் ரூ.20,000/- வருகிறது. என் அம்மாவிற்கு தான் அந்த பென்சன் வருகிறது, அதில் தான் நாங்கள் சாப்பிட்டு கொண்டு இருக்கிறோம். நீதிமன்றத்தில் என் அப்பாவின் பென்சன் புத்தகத்தை தாக்கல் செய்ய இயலுமா என்றால் தாக்கல் செய்ய இயலாது. அவ்வாறு தாக்கல் செய்ய இயலாததற்கு என்ன காரணம் என்றால் தேவையில்லை என்று நினைக்கிறேன். அந்த பென்சன் புத்தகத்தை தாக்கல் செய்தால் நிறைய பென்சன் வருவது தெரிந்து விடும், அதை மறைப்பதற்காகத்தான் தாக்கல் செய்ய மறுக்கிறேன் என்றால் சரியல்ல. என் தந்தை அந்த ஊரில் பெரிய மிராசுதாரர் என்றாலும், கோடிக்கணக்கான சொத்துக்கள் அவருக்கு உண்டு என்றாலும் அதை என்னிடம் கொடுத்து விட்டு தான் இறந்துள்ளார் என்றாலும், அதனை நான் மறைக்கிறேன் என்றாலும் சரியல்ல.

3) என் கணவர் பெயரில் நான் தாக்கல் செய்துள்ள குற்ற வழக்கில் மேல்முறையீட்டில் CA No.63/2013 நான் முன் தேதியிட்டு போடப்பட்ட பொய்யான வழக்கு என்று தீர்ப்பானது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நான் போட்ட CC

99/2013 வழக்கில் எதிர்மனுதாரர் தண்டனை ஆகி சுமார் 4 வருடங்கள் வேலை இல்லாமல் இருந்தார் என்றால் சுமார் 2 வருடங்கள் இருந்தார். நான் சொல்வது பொய் என்றாலும் எதிர்மனுதாரருக்கு CC 99/2013 வழக்கில் உத்தரவு தாக்கல் செய்த பிறகு 4 வருடங்களுக்கு பிறகு தான் அவருக்கு வேலை திரும்ப கிடைத்தது என்றால் சரியல்ல. Crl.RC No.41/2014 சீராய்வு மனுவை நான் தாக்கல் செய்தது எதிர்மனுதாரரும் அவரது தகப்பனாரும் கூடுதல் தண்டனை பெறவேண்டும் என்ற காரணத்திற்காகவும் எதிர்மனுதாரரின் தாயார் தண்டிக்கப்படவேண்டும் என்ற காரணத்திற்காகவும் தாக்கல் செய்யப்பட்டது, அந்த மனுவும் தள்ளுபடி ஆகிவிட்டது என்று சொன்னால் சரிதான். என் மகன்களும் வேலை பார்த்து சம்பாதிக்கிறார்கள் என்றாலும், எனது தகப்பனார் சொத்துக்களில் இருந்து எனக்கு பங்கு வரப்பெற்று அதிலிருந்து எனக்கு வருமானம் வருகிறது என்றாலும், என் தகப்பனாரின் பென்சன் தொகை எனக்கு தான் வருகிறது என்று சொன்னாலும், போதிய வருமானம் இருந்தும் உண்மைகளை மறைத்து எதிர்மனுதாரரை மன கஷ்டத்திற்கும், மன உளைச்சலுக்கும் ஆளாக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு இந்த மனுவை தாக்கல்செய்துள்ளேன் என்றாலும், உண்மைகளை மறைத்து இந்த மனுவினை தாக்கல் செய்துள்ள காரணத்தினால் நான் கோரியுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. இதுவரை ரூ.12,76,000/- ஜீவனாம்சதொகையாக எனக்கும் என் குழந்தைகளுக்கும் எதிர்மனுதாரர் வழங்கியுள்ளார் என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை</u> இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him to be Correct.*

*Sd/S.Mahalakshmi,*
*Chief Judicial Magistrate,*
Thanjavur at Kumbakonam.